# பாதுகாவலன்

PATHUKAVALAN


| | |
|---|---|
| பாஷையூர் | 500 |
| யாழ். சென் யேம்ஸ் | 500 |
| யாழ். 'பேராலயம் | 425 |
| இளவாலை | 374 |
| அச்சுவேலி | 325 |
| கரம்பொன் | 295 |
| பேசாலை | 290 |
| சில்லாலை | 250 |
| மன்னார் | 222 |
| மாதகல் | 212 |
| வங்காலை | 210 |
| பருத்தித்துறை | 208 |
| மானிப்பாய் | 200 |
| மொத்த பிரதிகள் | 9150 |


மலர்: 116 இதழ் : 3 2-2-1990 (பெப். 2 — பெப். 9) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு விலை ரூபா 2/=



RECEIVED Periodicals Library


## தோலகட்டி செபமாலைத்தாசர் சபை நிறுவுனரான அருள்திரு தோமஸ் அடிகளைப் புனிதராக்கும் முயற்சி யாழ்.நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

# செபமாலைத் தாசர் சபை நிறுவுனர் தோமஸ் அடிகளாரைப்பற்றி ஆய்வு

**புனிதர் பட்ட விசாரணை உரைஞர் உரோமாபுரியிலிருந்து சென்ற வாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்து தோலகட்டி செபமாலைத்தாசர் சபை நிறுவுனர் அருள்திரு. B.A. தோமஸ் O. M. I. அடிகளாரைப் புனிதர் ஆக்குவதற்கு ஆதாரங்கள் உள்ளதா என ஆய்வுகளை மேற்கொண்டார்.**

புனிதர்–பட்ட–விசாரணை உரைஞர் (Postulator General) அருட்திரு. ஜேம்ஸ் விற்ஸ் பற்றிக், உரோமாபுரியிலிருந்து இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு அருட்திரு. தோமஸ், அருட்திரு. கியோம் ஆகியோரைப் புனிதர் வரிசையில் இணைத்திட வேண்டிய தகவல்களைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டார்.

செபமாலைத் தாசர் சபை நிறுவுனரான அருட்திரு. தோமஸ் அடிகளாரது கடிதங்கள், நூல்கள், அவரைப் பற்றிய குறிப்புக்கள், ஆக்கங்கள் போன்றவற்றை சேகரித்து ஆதாரங்களைத் திரட்ட 23-ம் திகதி இவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார். செபமாலைத் தாசர் ஆச்சிரமங்களைச் சந்தித்தும், தோமஸ் அடிகளாருடன் தொடர்பானவர்கள், புனிதர் பட்டத்திற்காக உழைக்கும் பொறுப்பாளர் போன்றோரைச் சந்தித்தும் பேசுவதில் கவனம் செலுத்தினார். தோமஸ் அடிகளாரின் பரிந்துரைகளால் தயவு பெற்றவர்கள் இவரைச் சந்தித்து தமக்கு நிகழ்ந்தவற்றைக் கூறினர்.

விற்ஸ் பற்றிக் அவர்கள் ஆசாரத்திற்குரிய யோசவ்வாஸ் முனிவர் முத்திப்பேறு பெற்ற நிலைக்கு உயர்த்தும் வேலை



களுக்கு வத்திக்கானில் பொறுப்பாய் இருப்பதால் கண்டி மறைவட்டத்திலும் சில சந்திப்புக்களை மேற்கொண்டார்.

## இளைஞர் அபிவிருத்திப் பாசறை

யா/இளவாலை புனித என்றியரசர் கல்லூரியின் வருடாந்த இளைஞர் தலைமைத்துவ அபிவிருத்திப் பாசறை கல்லூரியின் உபஅதிபர் அருட்திரு. T. A. யேசுதாசன் அடிகளாரினால் ஒழுங்கு செய்யப்பட்டு தை மாதம் 10-ந்திகதி முதல் 13-ந்திகதிவரை நடைபெற்றது. இதன் இயக்குநராக திரு. W. N. தேவகடாட்சம் செயற்பட்டார்.

நிகழ்ச்சிகளாக புதிர்கள், கைப்பணிகள், முதலுதவி, வீதி ஒழுங்குமுறை, சிரமதானம், குழுஆய்வு, நாடகம், கலந்துரையாடல்கள், பலமொழிப்பாடல்கள் ஆகியவை இடம் பெற்றன. இறுதியாகப் பரிசில்கள் வழங்கப்பட்டன. கல்லூரி அதிபர் அருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரும், ஆசிரியர்கள் இருவரும் பலவழிகளில் உதவி நல்கி வழிநடத்தினர்.

நாற்பத்தைந்து மாணவர்கள் இப்பாசறையில் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

லோ. கிறிஸ்ரீனா நிலாணி.

## தேவதாய்மீதுள்ள பத்தியால் வளர்ச்சி

கொரியாவில் திருச்சபை அடைந்துள்ள வளர்ச்சிக்கு அங்குள்ள கத்தோலிக்கர் தேவதாயின் மீது மிகுந்த பக்தி வைத்திருப்பது ஒரு காரணமாகும் என கருதினால் கிம் ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டில் கூறினார்.

"நாம் தேவதாயிடம் அதிகம் மன்றாடுகிறோம். அவள் எமது திருச்சபையை வளர்ப்பதற்கு ஏராளமான ஆசீர்வாதங்களைப் பொழிகின்றாள். 1931-ல் மாசில்லாமல் உற்பவித்த மரியாளுக்கு கொரியா ஒப்புக்கொடுக்கப்பட்டமை கொரியத்திருச்சபை தேவதாயின் மட்டில் கொண்டுள்ள பக்தியை எடுத்துக்காட்டுகிறது.

## ரஷ்ய தொலைக்காட்சியில் திருப்பலி காண்பிப்பு

ரஷ்யா Orthodox திருச்சபையின் பிதாப்பிதா பிறைமன் நிறைவேற்றிய கிறிஸ்து பிறப்பு திருப்பலி முதன் முறையாக ரஷ்யத் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது.

சோவியத், யூகொஸ்லோவேக்கியா வரலாற்றிலும் முதன் முறையாக கிறிஸ்மஸ் விழாவையொட்டி ஜனவரி 7-ம் திகதி திருச்சடங்குகள் நடைபெற்றன.

## கொலை மிரட்டல்

சான்சல்வடோர் பேராயர், றிவேரா தாமஸ், துணைஆயர் கிறகோரியோ இருவருக்கும் கிடைத்துள்ள கொலை மிரட்டல்கள் பற்றி அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் டானியேல் பிளச்சஸ் ஆழ்ந்த கவலைதெரிவித்துள்ளார். மேலும் சல்வடோர் ஆயர்களைத் தாக்க முயல்பவர்கள் முழுத் திருச்சபையையுமே தாக்குகிறார்கள் என்றும், துயரமும், இழப்பும் நிறைந்த சோதனைக் கட்டத்தில் மனித மாண்பு, மனித உரிமைகளைக்காக்கவும், வன்முறைக்குப் பதிலாக அமைதியை நிலைநாட்டவும் சல்வடோர் ஆயர்கள் எடுத்த முயற்சிகளில் அமெரிக்க ஆயர்கள் உறுதுணையாக இருப்பார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

## யாழ். மனித முன்னேற்ற நிலையம் பாலர் கல்விக்கு உதவி

யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்தின் அனுசரணையுடனும், பங்குத்தந்தை அருட்திரு. P J. ஜெபரட்ணம் அடிகளாரின் முயற்சியுடனும் புதுக்குடியிருப்பில் "புனித வளன் பாலர் பாடசாலை" புதுவருடதினத்தன்று கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

## கருதினால் கௌரவிப்பு

கராச்சி- பாகிஸ்தான் தொலைக்காட்சியில் 25 ஆவது ஆண்டு விழாவின் போது காண்பிக்கப்பட்ட சிறப்பு நிகழ்ச்சியின் முக்கிய விருந்தினராகக் கருதினால் யோசவ் கொடோரோ தெரிவு செய்யப்பட்டு தொலைக்காட்சியில் பேட்டி அளித்தார். பாகிஸ்தான் தொலைக்காட்சியில் முதன் முறையாக முக்கியமான ஒரு கிறிஸ்தவத் தலைவர் தோன்றிய நிகழ்ச்சி இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

## நீதி பொங்க, பொங்கல்

புதுக்குடியிருப்பு மறையாசிரியர் சங்கத்தினரால் வழமைபோல இவ்வருடமும் பொங்கல்விழா கொண்டாடப்பட்டது. உணவளித்து, உயிர் காக்கும் இறைவனுக்கு நன்றி செலுத்திய இவ்விழாவில், எமது நாட்டில் அமைதி பொங்க, மகிழ்ச்சி பொங்க, உண்மை பொங்க, நீதி பொங்க அரிசி பொங்கி, ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

## பங்குரீதியான பொதுநிலையினர் கழகப் பொதுக்கூட்டம்

புதுக்குடியிருப்பு பங்கு பொதுநிலையினர் கழகத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது பொதுக்கூட்டம் தை மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை, புதுக்குடியிருப்பு றோ. க. வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. "பொதுநிலையினரின் பணிகள்" பற்றிய பங்குத்தந்தையின் அறிவுரையும், "மறையாசிரியர் பணியும், அவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" பற்றியகலந்துரையாடலும் இடம் பெற்றது.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காத்திறவன் கண் விழிப்பது வீண்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்கருத்து

## அரச முன்மாதிரிகை...?

இலங்கை ஆயர் மன்றத்தின் நீதி, சமாதானம் மனித முன்னேற்றத்துக்கான தேசிய ஆணைக்குழு நீதியைக் கடைப்பிடிக்கும்படியும், சட்டம் ஒழுங்குகளுக்கு விரோதமாக நடக்காதபடியும் அரசு முன்மாதிரிகை காட்டவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்துள்ளது.

பேரருட்திரு றேமன் பீரிஸ் கைச்சாத்திட்டு பிரசுரித்துள்ள அறிக்கையானது போராளிக் குழுக்களின் வன்முறைகளைக் கண்டிக்கும் அதே தொனியில் அரசின் வன்முறைகளையும் கண்டித்துள்ளது.

தென் பகுதிப் பயங்கரவாதம் அடக்கப்பட்டு விட்டது என்று பறைசாற்றும் இலங்கை அரசு அதற்காக கையாண்ட உத்தி சர்வதேச மன்னிப்புச் சபையின் வன்மையான கண்டனத்துக்கு உட்பட்டது. கைவிடப்பட்டவர்களுக்கு குரல்கொடுக்கும் சேவையே தமது நோக்காகக் கொண்டியங்கும் புனித ஸ்தாபனத்தையே குறைகூறி அரசு தனது முகத்தில் கரிபூசிக் கொண்டது, இன்று உலகம் நகைக்கும் செயல்.

போராளிக் குழுக்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவது, மாற்று வழியற்ற செயலாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் அரசும் அதைவிடக் கேவலமான செயல்களில் ஈடுபடுவது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

பயங்கரவாதத்தை ஒழித்துவிட அரசு கையாண்ட பயங்கரவாதத்தில் அப்பாவிப் பொதுமக்கள் பலர் சித்திரவதைகளுக்கும், கொலைகளுக்கும் ஆளாகியுள்ளனர். இதனையே இலங்கை ஆயர் மன்ற ஆணைக்குழு தனது அறிக்கையில் சாடியுள்ளது.

இலங்கை வாழ் மக்கள் கடந்த காலங்களில் அனுபவித்த இன்னல்கள் காரணமாக, மனம் சோர்ந்துபோய், எதுவும் நடக்கட்டும், எல்லாம் நடந்து முடியட்டும், அமைதி திரும்பட்டும் என்ற எதிர்பார்க்கையுடன் இருக்கின்றனர். இக்காரணத்தினால் அரசு மேற்கொண்டு வந்துள்ள பாரதூரமான செயல்களைப் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் இதனைச் சுட்டிக் காட்டுவதும், கண்டிப்பதும், பொது ஸ்தாபனங்களினதும், நிறுவனங்களினதும் தலையாய கடமையாகும்.

அரசின் அனுசரணையையும், ஆதரவையும், சலுகைகளையும் பெறும் நோக்குடன் வாய்மூடி இருந்து, மௌனத்தின் மூலம் சம்மதத்தைத் தெரிவித்து வாழுவோமாயின் அது நாம் செய்யும் பெரும் பாதகமாக அமைந்துவிடும்.

சர்வதேச மன்னிப்புச்சபைக்கே அபகீர்த்தியை ஏற்படுத்த அரசு முனைந்தது என்றால், எமக்கும் பல இடையூறுகளைக் கொண்டுவரும் என்று அஞ்சி வாழ்ந்துவிடாது, துணிவுடன் குறைகளைச் சுட்டிக் காட்ட திருச்சபையும், பொது ஸ்தாபனங்களும் முன்வரவேண்டும்.

சட்ட பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக உழைப்பது கிறிஸ்தவ தர்மமாகாது என்ற கோட்பாட்டை அளவுக்கு அதிகமாக வலியுறுத்தி சட்ட விரோத செயல்களையும், அத்துமீறல்களையும் மூடிமறைக்கும் அரசின் உத்திகளுக்குத் துணை போகாது தன்னைப் பாதுகாப்பது திருச்சபையின் கடமையாகும்.

தனி மனிதர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடும்போது அது அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்திவிடும் என்ற காரணத்தால் இத்தகைய செயல்களுக்கு முன்நின்று உழைக்க பின்வாங்குவது இயற்கையே. இவ்வாறு குரல் கொடுத்த மதத்தலைவர்கள் கொலை செய்யப்பட்ட வரலாறும் அண்மைக்கால நிகழ்வுகளே.

ஆனால் பொது ஸ்தாபனங்களாக, ஒருமித்த குரலாக, அரச பயங்கரவாதத்தைச் சுட்டிக்காட்ட மக்களுக்கு நீதி கேட்க, இன்று திருச்சபையின் குரல் ஓங்க வேண்டும். அது திக்கெட்டும் பரம்பவேண்டும். மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அரசு முன்மாதிரிகை காட்டதூண்டவேண்டும்.

# தேனருவி

## ஆண்டின் 4ஆம் ஞாயிறு
## ஏது எளிது?

புனித பிரான்சிஸ்கு அசிசியார் ஏழ்மையை ஓர் அழகான இளநங்கையாக வருணித்து செபிக்கிறார். "என் இனிய இயேசுவே! எனக்கும் என் அருமைக்காதலி ஏழ்மைக்கும் உமது அளவற்ற இரக்கத்தைக் காண்பித்தருளும். அவள் இன்றி என்னால் நிம்மதியாக இருக்கவே முடியவில்லை. அவளுக்காகத் தினமும் ஏங்குகிறேன். அவளின் அழகில் மருண்ட பலர் பாதி வழியில் பாதை மாறி விட்டனர். இன்று அவள் கலங்கிய கண்களுடன் வாடுகின்றாள். அறநெறிக்கு அடிப்படையும், புண்ணியங்களுக்கெல்லாம் அரசியுமாக விளங்கும் அவளின் அழகை இரசிக்க பலர் மறுக்கிறார்கள். அவளின் கவர்ச்சி உம்மையும் விண்ணகம் விட்டு மண்ணகம் வரச்செய்தது ..."

இப்படிப் பல புனிதர்கள் ஏழ்மையை மனமுவந்து தழுவிக் கொண்டனர்.

உண்மையில் ஏழ்மை சாபத்தின் விளைவு அல்ல. மாறாக அது நிறை பேற்றிற்கு வழி. ஞாயிறு மூன்று வாசகங்களும் ஏழ்மையில் வாடும் மக்களுக்கு ஆறுதலாயும், எளிமையை உயர் பண்பாகக் கருதும் தூண்டுகோலாயும் விளங்குகின்றன. எளிமை உள்ளம் கொண்ட மக்களை இறைவன் ஆழ்ந்த அன்பினாலும், அளவில்லாத கரிசனையினாலும் அங்கீகரிக்க விரும்புவதை படம் பிடித்துக் காட்டுகின்றன.

யார் இந்த ஏழைகள்? வேதாகமத்தில் ஏழை, எளியவர்பற்றி அதிகம் பேசப்படுகின்றது. உணவு, உடை, இல்லிடம் இல்லாமல் பசியிலும், நோயிலும் வாடுவோர் ஏழைகள். அன்பு, கரிசனை, பராமரிப்பு, பாதுகாப்பு இல்லாமல் தவிப்போரும் ஏழைகள். இனம், மொழி, குல முத்திரைபொறிக்கப்பட்டு பாரபட்சமாக ஒடுக்கப்பட்டு உரிமை இழந்திருப்போரும் ஏழைகள். அதே வேளை ஏழையோ, பணக்காரனோ, படித்தவரோ, பாமரரோ, எளிமையான மனம் கொண்டு வாழ முற்படும் போதும் அவர்கள் ஏழைகளே.

பணக்காரர் எளிமை கொண்டவராகவும் இருக்கலாம். ஏழைகள் அகந்தை கொண்டவராகவும் விளங்கலாம்.

இயேசு குறிப்பிடுவது, அழைப்பது எளிமை- மனங்களையே, எளிமை- வறுமையல்ல. சோம்பல், அலட்சியம், அநீதி இவற்றின் விளைவால் வாட்டும் வறுமையை ஒழித்து வளர, வளர்க்க இறைவன் எதிர்பார்க்கிறார்.

"எளியமனதோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களதே' என்று உரைக்கும் போது எளிமை விண்ணரசுக்கு வழி என்கிறார். இயேசுவும் எளிமையை மணந்து கொண்டார். தம் கருவிலிருந்து கல்லறைவரை எளிமையின் உருவமானார்.

பொருளால், உணர்வால், உறவால் ஏழ்மையாக்கப்பட்டோரையும் சிறப்பாக அன்பு செய்து மகிழ்வால் அவர்களை நிரப்பினார். இயேசுவின் போதனையும், சாதனையும் ஒன்று சேர்ந்து எளியவருக்கு விளக்கம் தருகின்றன. எளியவர்- ஆண்டவரில் தங்கி வாழ்வோர். உயர்விலும், தாழ்விலும் இறை வழி நடத்துதலைக் காண்போர். மனமுவந்து பகிர்ந்து வாழ்வோர். தாராள சிந்தையும், தூய்மையும் கொண்டோர்.

பணமூடைகளைப்புதைத்து, வங்கியில் நிலையாக இருப்புக்களை வைத்து விட்டு உண்ணாமல் இருப்பவர் எளியவரல்லர். மனிதரிலும் பார்க்க பொருளுக்கும், இலாபத்திற்கும் முக்கியத்துவம் அளிப்பவரல்லர். பேராசை, அநீதி, அதர்மத்தை வளர்த்து உயிருள்ள அன்புத் தெய்வத்தை விலை பேசுவது அகந்தை.

இயேசு தன் வாழ்வில் பொருளைச் சேர்த்து வைக்கவுமில்லை, செயலிழந்து தூங்கவுமில்லை. எமது எளிமை வாழ்வில் உண்மை நிலையைப் புரிந்து திருந்தி வாழ மலைப் பொழிவின் பொன்மொழிகளால் அளவிடுவோம். பணத்தையும், பற்றுக்களையும் துறந்து பண்பைப் பெருக்கினால் நாம் எளிய மனத்தோராய் விண்ணரசின் உரிமைக் குடிமக்களாய் மனநிறைவோடு வாழ்வோம்.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

---

சொப். 2:3 3:12- 13 அவர்கள் மந்தைபோல் இளைப்பாறுவர்.
கொரி. 1:26 -31 வலுவற்றதை தேர்ந்து கொண்டார்.
மத். 5:1 -12 எளியமனத்தோர் பேறு பெற்றோர்.

---

## உங்களுக்குத் தெரியுமா? போட்டி-30

பாதுகாவலன் பத்திரிகையில் இதழ், 41 தொடக்கம் இதழ் 45 வரை வினாவுக்குரிய சரியான விடையைக் கண்டு பிடித்து வினா இலக்கத்தையும், சரியான விடையையும் தெளிவாக 19-2-90 ற்கு முன் ''பாதுகாவலன்'' அ. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

### வினாக்கள்

1. ''இலங்கையில் சங்கீதம், இலக்கியக்கலைகள், நாடகம், சித்திரம் ஆகியவற்றிற்கு கிறீஸ்தவப் பங்களிப்பு'' – கட்டுரைப் போட்டியில் இத்தலைப்பு எந்த வர்க்கத்தினருக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது?
2. 1.குருமட மாணவனாக இறைவனடி சேர்ந்த புனிதர் யார்?
   11. குளிரில் நடுங்கும் ஏழைக்குத் தனது போர்வையைக் கொடுத்த புனிதர்யார்?
3. மக்கள் மனத்தில் விரக்தியையும், அங்கலாய்ப்பையும் ஏற்படுத்தும் காரணிகள் எவை?
4. திருவழிபாட்டு ஆண்டு காலத்தில் திருச்சபையின் அங்கத்தவர்கள் அனைவரும் எதற்குக் கடமைப்பட்டுள்ளனர்?
5. அரசியல், சமூக மற்றும் பல துறைகளிலும் வஞ்சிக்கப்பட்ட இளம் சமுதாயம் விரும்புவது என்ன?
6. 'நாகூம்' இறைவாக்கினர் அறிவிக்கும் செய்தி என்ன?

### போட்டி 29 இன் சரியான விடைகள்

1. அருட். சகோதரி வில்லி ஒசா.
2. திருத்தந்தை 11-ம் பத்திநாதர்.
3. சிறப்பாக இளைஞரை அழைக்கின்றார்.
4. 1. பொளீன் ஜரிக்கோ.
   11. தாயும், மகளுமான ஸ்டெபனி, ஜியான் பிகாட்
5. 1935 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் நான்காம் நாள் முறையாக ஆரம்பிக்கப்பட்டது.
6. மந்தை மேய்க்கும் தொழில்.

46-பேர் சரியான விடைகளை எழுதியுள்ளனர். அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

**பரிசு பெறும் நற்பேறாளர்**
T. மெடோனா மிராண்டா,
8-ம் வட்டாரம், பேசாலை.

---

### மரணஞாபக அறிவித்தல்

பெப்ருவரி—10
அந்தோனி விமலறாஜ் ஜெனிற்றன் லம்பேட்
லோறன்ஸ் அமலயூட் லம்பேட்.
முதலாம் ஆண்டு நினைவுத் திருப்பலி
தலைமன்னைர், புனித லோறன்ஸ் ஆலயம், காலை 6.30 மணி.

A/21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்




## 15. மார்குஸ் அவுரேலியுஸ்

சீரான மனமும்
நேரான குணமும்,
மனுக்குலத்தில்
நீறாத அக்கறையும்
ஒழுக்கத்தின் பால்
நிலையான பற்றும் கொண்ட மார்குஸ்
கி. பி. 161இல் சாம்ராஜ்யப் பொறுப்பேற்றான்.
ஸ்தொயீக்க தத்துவத்தில் நாட்டமுள்ள இவன்
கிறிஸ்தவரைக் கொன்றது அதிசயமானதே.
ஆயினும்
கிறிஸ்தவர்கள் சாவில் காட்டிய ஆர்வம்
அவர்களை அந்த மதவெறியர்களாகவும் (Religious fanatics)
கிறிஸ்தவர் பற்றிய வதந்திகள்
அவர்களைச் சட்ட விரோதிகளாயும்
சமுதாயத்தின் எதிரிகளாயும்
அடையாளங் காட்ட
அவுரேலியுஸ் திராஜனின் சட்டத்திற்கு
மீளவும் உரமிட்டு நீருப் வார்த்தான்.
அவன் வளர்த்த வேள்வியில்
பலநூறு கிறிஸ்தவர்கள் ஆகுதியாயினர்.
அவர்களுள் ஒருவர் புனித யுஸ்ரின்.
இவர் சத்தியத்தின் பாதுகாவலருள் ஒருவர்
கிறிஸ்தவத் தத்துவ ஞானி.
உண்மையைத் தேடி அலைந்து
அதைக் கிறிஸ்தவத்தில் கண்டவர்.
கிறிஸ்தவக் கொள்கைகளை
அறிவ ரீதியிலும் நிலைநிறுத்தி
நூல்களை வெளியிட்டு
போராட்டம் நடத்திய ஒரு புத்திஜீவி
அவருடைய அறிவுசார் வைரி,
தத்துவஞானி கிரசன்ஸ் என்பவளால் குற்றஞ்சாட்டப்பட்டார்.
விசாரணையின் போது
"நான் ஒரு கிறிஸ்தவன்" என மகிழ்வுடன் அறிக்கையிட்டு
தலைவெட்டுண்டு இறந்தார்.
கி. பி. 177இல்
லையன்ஸ் நகரில்
அகஸ்துஸ் சீசரின் வருடாந்த விழாவையொட்டு
ஒரு பெருங்கலகம் எழுந்தது.
அதில் பலரும் கைதாயினர்.
அவர்களுள் ஒருத்திதான் புனித பிளாந்தினா.
வயதில் சிறியவள்
ஆனால் சிறுத்தைப்புலி.
அமைதான்
ஆனால் கூண்டு புலி பூனையாகாதே.
அராஜகத்திற்கெதிராய்
அகிம்சையை ஆயுதமாக்கினாள்.
அந்திக்கெதிராய்
அன்பின் ஆடையணிந்தாள்.
அவளது இளமையும், மென்மையும்
மறுதலிப்போரில் முதல்பெண் அவள்தான் என
எண்ண வைத்தன.
ஆனால் அவள் காட்டிய வீரம்
முன்பு மறுதலித்தவர்களையே
பின்பு மரணத்தை நாடத் தூண்டிற்று
பல்வேறு உபாதைகள் பட்டாள்.
வலையால் கட்டி எருதின் முன் போட்டார்கள்.
சவுககால் அடித்தார்கள்.
இறுதியில் வாளால் தலைகொய்து
அவளைக் கொன்றுபோட்டார்கள்.
திருச்சபைக்கு
அவுரேலியுஸ் அளித்த மலர்வளையத்தில்
இன்னும் ஒரு அழகிய மலர் புனித சிசிலியாள்.
அவள் மலர்தான.
வாசனை வீசும் பெண்மலர்.
பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும் என்பார்கள்.
அவளோடு சேர்ந்த அவளது கணவனுக்கும்
அவனது சகோதரனுக்கும் கூட
சிசிலியாவினுள் பற்றியெரிந்த அந்தச் சத்தியத் தீ
தொற்றிக் கொண்டது.
பெருங்குடியில் பிறந்த அவள்
தனது விசுவாசத்திற்கும்
கன்னிமையின் அர்ப்பணத்திற்கும்
தன் கணவனிடம் வேளி கேட்டாள்.
அவனோ கொழுகொம்பும் உரமுமானான்.

— சந்திரன்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## பாலத்துவ சபையின் ஒளிவிழா

மார்கழி மாதம் 30-ந்திகதி (வெள்ளிக்கிழமை) அனலைதீவில் திருப்பாலத்துவ சபையின ஒளிவிழா வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பங்குத்தந்தையின் உரையும் யாழ். மறைவட்ட தலைவரின் உரையும் இடம்பெற்றது. ஊர்காவற்றுறை பங்குதந்தை அருட்திரு திருபானந்தன் அடிகளார் உரையாற்றுகையில்தான் 'பல்வேறுபட்ட பங்குகளின் ஒளிவிழாக்களில் கலந்து கொண்டிருக்கின்றேன். ஆனால் இங்கு கலந்து கொள்வதில் பெருமகிழச்சி அடைகின்றேன். இப்படியான நிகழ்ச்சிகள் தொடர்ந்து இங்கு நடைபெறுவதற்கு நான் ஒத்துழைப்பு நல்குவேன்' என்று கூறினார் மறைவட்ட தலைவர் உரையாற்றுகையில் பயிற்றப்பட்ட வழிகாட்டிகள் இல்லாத போதும் பாலதுவ சபையானது ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருவதையிட்டு மகிழ்ச்சி அடைவதாகவும், வெகு விரைவில் ஒருவருக்காவது பயிற்சி அளிப்பதற்கு ஒழுங்கு செய்து தருவதாகவும், இச்சபைமேலும் வளர ஊக்குவிப்பதாகவு கூறினார். பின்னர் கலைநிகழ்ச்சி அதைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை பங்குத்தந்தையினால் பரிசு வழங்கும் வைபவம் இடம்பெற்று இறுதியாக நன்றி உரையுடன் ஒளிவிழா இனிதே முடிவுற்றது.

தகவல்:- யோசப்ராஜ் பங்கிராஸ்
ஊர்காவற்றுறை.

## வாசகர் கருத்து

அன்பின் பாதுகாவலன் ஆசிரியருக்கு! காவலன் இதழ்கள் வாரத்திற்கு வாரம் அதிகரித்துக்கொண்டு வருகின்றது; புதிய எழுத்தாளர்களது படைப்புகளும், சிறுகதைகளும் புரட்சியைத் தூண்டுவதாகவும், படிப்பினையைத் தருவதாகவும் உள்ளது

ஒவ்வொரு அம்சமும் அறிவுக்கு விருந்தாகவும், வாழ்வுக்கு வழியாகவும் அமைந்துள்ளது.

பாதுகாவலன் இதழ் பெருகுக!

வாசக நேயர்கள் வளர்க!

ஜெனிவி தனபாலன்
பெர்னாண்டோ;
மல்னார்.

## சிந்தனைக்கு......

★ அன்பு நெஞ்சங்களே! ஒன்றின் மேல் அளவுக்கு மிஞ்சிய அன்பு வைக்க வேண்டாம். ஏனெனில் அந்த ஒன்று எமக்கு சிலவேளையில் கிடைக்காமல் போய் விடும். இதையிட்டு நாம் பாரிய கவலை கொள்ள வேண்டி வரும்.

★ அன்பு நெஞ்சங்களே! ஒன்றின் மேல் அளவுக்கு மிஞ்சிய வெறுப்பு வைக்க வேண்டாம். ஏனெனில் அது நமக்குத் தேவை ஏற்படும் போது அதை நாம் வெறுத்து விட்டோமே என்று கவலை கொள்ள வேண்டி வரும்.

S. அமலன்
நாவாந்துறை

## கலைநிலா... கலைநிலா
## கவின் கலைகள் பயிலகம் பற்றி

திரு. V. J. கொன்ஸ்ரன்ரைனுடன்......



திருமறைக்கலாமன்றத்தின் பன்முகப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் ஒரு வடிவமாக வருகின்ற மாசித்திங்கள் ஏழாம் நாள் ஆரம்பிக்கப்படவிருக்கும் கவின்கலைகள் பயிலகத்தினைப் பற்றிய விபரங்களைத் திரட்டுமுகமாக மன்றத்தின் பொதுச்செயலாளர் திரு V.J. கொன்ஸ்ரன்ரைனை அண்மையில் சந்தித்தேன். 'குருநகர் துரை' என்ற பெயரில் கலைத்துறையில் பிரபல்யம் அடைந்துள்ள திரு. கொன்ஸ்ரன்ரைன் அவர்கள் முப்பது வருடங்களுக்கும் மேலான மேடை அனுபவம் உள்ளவராவர். பிரதி. இயக்கம், நடிப்பு இசை, ஒலி. ஒளி அமைப்பு போன்ற நிகழ்த்திக் காட்டுதலின் சகல துறைகளிலும ஈடுபட்டுள்ள இவர் பாரம்பரியம் மற்றும் நவீன நாடக முறைகளில் பரிச்சயமும், ஆளுகையும் உள்ளவராவார். இவர் 1970 களிலிருந்தே திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகளுடன் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார் அவருடைய கடந்தகால அனுபவங்களைப் பற்றி வினாவியபோது 1970 களில் தமது கடுமையான கூட்டுழைப்பால் மேடையேற்றிய தென்னாசியாவின் மிகப்பெரும் படைப்பான 'அன்பில் மலர்ந்த அமர காவியம்' பல மேடைகள் கண்ட பலிக்களம், முதல் முதல் இங்கிருந்து இந்தியா சென்று மேடையேறிய களங்கம் போன்ற நாடகங்களை இனிமையுடன் நினைவு கூர்ந்தார்

திருமறைக்கலாமன்றத்தின் பொதுக்காரியதரிசி என்ற அடிப்படையில் அவரிடம் கவின் கலைகள் பயிலகத்தின் நோக்கம் மற்றும் செயற்பாடுகளை பற்றி வினாவினேன். பின்வரும் நோக்கங்களை அவர் முன்வைத்தார்.

- அண்மைக்கால நிகழவுகளால் தொடர்ந்தும் வீழ்ச்சிப் போக்கையே காட்டிவரும் எமது மண்ணின் கலைகலாச்சார நிகழ்ச்சிகளை ஊக்குவிக்கவும், வளர்க்கவும் கலையை சாதாரண மக்களின் கைகளில் கொடுப்பது.
- பலவித சமூக சமய வேறுபாடுகளால் பிளவுண்டு கிடக்கும் எமது மண்ணின் ஒற்றுமைக்கு கலை ஒரு சிறந்த ஊடகம் என்ற புரிதலின் அடிப்படையில் அதையே நோக்கமாகக் கொண்டு கலையை வளர்த்தல், சமூக முன்னேற்றம் நோக்கி உழைத்தல்.
- இதன் அடிப்படையில் எவ்வித வேறுபாடும் இல்லாமல் கலை நாட்டமுள்ளோர் அனைவருக்கும் பயிற்சியளித்தல், திறமை அடிப்படையில் அவர்களைத் தொடர்ந்தும் படிக்க உதவி செய்தல்.
- அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைகளில் தோற்றுமுகமாக மாணவரைத் தயாரித்தல்.
- பயிற்சி முடிந்த பின்பும் கூட ஈடுபட்டுள்ளவர்களுக்கு திருமறைக் கலா மன்றத்துடன் இணைந்து அதன் தயாரிப்புகளில் பங்குபற்ற சந்தர்ப்பமளித்தல்.
- இந் நோக்கங்களுடன் செயற்பட்டு தரத்தையடைந்த ஒரு பெரும் கலைக்கல்லூரியாக இதனை உருவாக்கல்.

இப் பயிலகத்தின் ஆரம்பம் மற்றும் நடைபெறும் வகுப்புகள் பற்றி விசாரித்த போது பின்வரும் விபரங்களை வெளியிட்டார்.

- வயலின், வீணை மிருதங்கம் போன்ற சாஸ்திரிய இசைக்கருவிகளும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படும்.
- ஓவியர் மாற்கு அவர்களின் மேற்பார்வையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டுவரும் ஓவிய வகுப்புகளும் ஒருவருடத்தின் முன்பே ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வரும் நாடகப் பட்டறையும், மேற்படி பயிலகத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படும்

சிற்பம் மற்றும் வார்ப்புக்கலை வகுப்புக்களையும் காலப்போக்கில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி வகுப்புக்கள் அனைத்தும் இடவசதியின்மை காரணமாக தற்போது பல்வேறு இடங்களில் தனித்தனியாக நடைபெறுகின்ற போதிலும் யாழ் பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 7 புதிய கட்டிட வேலைகள் முடிவுற்றபின் அனைத்தும் அங்கு ஒன்றிணைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தொடர்பு கொள்ளும் வழிவகைகள் சீர்குலைந்திருக்கும் இன்றைய நிலையில் இக்கட்டுரையைப் படிப்பவர்கள் தங்கள் நண்பர்களுக்கும் இப் பயிலகத்தை அறிமுகப்படுத்தி எவ்வித சமய, சமூக வேறுபாடுமின்றி கலை ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் வகுப்புகளில் பங்குபற்றிப் பயன்பெற வழிசெய்யுமாறு திரு. கொன்ஸ்ரன்ரைன் அவர்கள் கேட்டுக் கொண்டார். கட்டணம் செலுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்குபவர்களுக்குத் தன்பட்ட உதவிகள் வழங்கவும் மன்றத்தினர் தயாராயிருக்கின்றனர். எனவே திறமைக்கு சந்தர்ப்பமும், ஊக்கமும் வழங்கப்படும். அனைவரும் வாருங்கள் என்கிறது 'கவின் கலைகள் பயிலகம்' இப் பயிலகத்தின் உத்தியோக பூர்வத் திறப்பு வைபவமும். மாசித்திங்கள் ஏழாம் நாள் இல: 2 பத்திரிசியார் வீதியில் இடம் பெறும்.

கலைஞர்களே! சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள்.
உங்கள் திறமைக்கு உரமிடுங்கள்.

மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காண ஆயிரம் கண் வேண்டும்

**அன்பினால் ஆக்கம் உண்டு. இனிக் கதையைப் படியுங்கள்.**

சிறுகதை

மேல் நாட்டிலிருந்து வீட்டுக்கு ஐந்து ஆண்டுகளுக்குப் பின் வந்த கிருபைராஜ் எவ்வித சலசலப்பும் இல்லாமல் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்தான்.

''தம்பி உடுப்பை மாற்றி, மேலக் கழுவி விட்டு சாப்பிட வாவன்,'' என்றாள் கிருபையின் தாயார்.

''அம்மா, நானொருக்கா சேர் வீட்ட போயிற்று வந்து சாப்பிடுறன்,'' என்றான் கிருபை.

''சேர் என்ன ஓடியா போகப் போறார்? அண்ணா அவர் வீட்ட விட்டு அசைய மாட்டார், ஆறுதலாகக் காணலாம் தானே!,'' என்றாள் தங்கை கலா. அம்மா, தங்கையின் ஆலோசனையைக் கேட்ட கிருபை கொஞ்ச நேரம் ஆற நினைத்த போதும், அவன் மனம் கடந்த கால நினைவுகளால் நிறைந்தன. அவனுள் அவனுள்ளம் பேசியது.

''யாழ் நகரில் பெரிய கல்லூரி ஒன்றில் அப்பா என்னைச் சேர்த்தார். அதுதான் அவர் எனக்குச் செய்த நல்லதொரு காரியம். அத்துடன் அவர் தன் கடமை முடிந்து விட்டதுபோல் நடந்து கொண்டார். அவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுப் பல வருடங்கள் ஆகிவிட்டன.

**— தாவீது தாசன் —**

அவர் அங்கு கற்ற கடமையுணர்வு ஓய்வு பெற்றுக் கொண்டாலும், குடிப்பழக்கம் ஓய்வு பெறவில்லை. அவரின் ஓய்வூதியப்பணம் அவருக்குத்தான் போதும். ஏழ்மையின் கோரப்பிடியில் நாங்கள் தவித்தோம். வறுமை எங்களை வாட்டிய போதும் நானும், தங்கையும் கடமையில், அதாவது வீட்டுக் கடமை, கல்லூரிக் கடமையில் தாழ்ந்து விடவில்லை. பட்டினி கிடந்தென்றாலும் படித்து வகுப்பில் முதன் மாணவர்களாக வரத்தவற மாட்டோம். இதற்கெல்லாம் காரணம் எங்கள் அம்மாவின் இறைநம்பிக்கை என்று சொன்னால் சிலர் சிரிக்கலாம். ஆனால் உண்மை அதுதான். அம்மாவின் தியாகத்தை நினைத்தாலே உள்ளம் பூரிக்கிறது.

படிப்பிலும், விளையாட்டிலும் நான் திறமை காட்டினாலும், என் உள்ளம் அம்மாவை நினைத்து அழவே செய்தது. அன்றொரு நாள் சமயபாடத்திற்கு அன்பழகன் சேர் வந்தார். அவரின் கனிவான பேச்சும், கருணை மிகுந்த பார்வையும் என்னைக் கவர்ந்தன. அவரைக் கண்டு என் மனம் ஆறுதல் பெற்றது. அவர் ஒவ்வொரு மாணவரையும் தனித் தனியாக அழைத்து அன்புடன் வீட்டு நிலைமைகளை விசாரித்தார் எனக்கோ! இதயத்தில் பாரம் கூடிக் கொண்டு சென்றது நெஞ்சு அடைத்தது, உடல் வேர்த்தது. என் அண்ணன் நினைப்பு, அவ்வளவுதான் தெரியும், இருந்தபடியே சரிந்தேன்.

கண்களைத் திறந்தபோது, அம்மா, தங்கை, அன்பழகன் சேர் என்முன் நின்றனர். அன்பழகன் சேர் என்னைத் தேற்றி ஆறுதல் வார்த்தைகள் சொன்னார். அன்றிலிருந்து நான் வெளிநாடு செல்லும் வரையும் அவர் எனக்கு அப்பா, அம்மா, தங்கைக்குத் தெரியாமல் பல உதவிகளைச் செய்துவந்தார். சில நாட்களின் பின் அப்பா குடித்த குடி அவரைக் குடித்து விட்டது. அண்ணன் சென்ற பாதை பாதி வழியில் முடிந்து விட்டது. அம்மாவையும், தங்கையையும் காக்கும் பணி என் தலையில் விழுந்தது.

கல்வியை இடைநிறுத்தி வேலை செய்ய நினைத்த போது சேர் என்னைத் தடுத்து, கல்வியைத் தொடர வைத்தார். அதன் பலனாக வெளிநாட்டிற்குச் சென்றபோழுது நல்ல வேலை கிடைத்தது. இரண்டு வருடங்களுக்குள் பட்ட கடன் அனைத்தும் அழித்து, பாங்கான இன்று இருக்கும் வீட்டைக்கட்ட முடிந்தது. இதற்கெல்லாம் காரணம் அன்பழகன் சேர், அன்பழகன் சேர்.

கிருபைராஜ் சாய்மனைக் கதிரையை விட்டெழுந்து வீட்டுக்குள் சென்றான். கையில் ஒரு சிறிய பொதியுடன் வெளியே வந்தான். ''அம்மா, சேர் வீட்ட போய் வருகிறேன்,'' என்று சொன்ன கிருபை தங்கையின் சைக்கிலை எடுத்துக் கொண்டு, பள்ளம் புட்டி நிறைந்த வீதியால் பாய்ந்து பாய்ந்து போனான்.

'அறிவகம்' சேர் வீட்டின் பெயர். அதன் முன் மூச்சு வாங்க சைக்கிளை விட்டு இறங்கினான். வீட்டை ஒரு முறை ஏற இறங்கப்பார்த்தான். வீட்டில் எதுவித மாற்றமும் இல்லை. வீட்டு நிலையில் ''தேவனின் மகிமை உன்னதமானது,'' என்ற வார்த்தை அவனை வரவேற்றது. ''மின் மணி'' பொத்தானை அமுக்கினான், மின் மணி ஒலிக்கவில்லை, எப்படி ஒலிக்கும்?

கதவில் தட்டினான் ''யார் அது'' என்ற குரல் ஒலி கேட்டு கிருபையின் முகம் மலர்ச்சி கொண்டது. சேர் பின் பக்கம் இருந்து வந்தார். வந்தவர் கிருபைராஜை ஏற இறங்கப் பார்த்தார்.

ஐந்து வருடத்துக்குமுன் கிருபை மெலிந்த உடல், அழகாக வாரிவிட்ட நெற்றியில் விழுந்த கேசம் உடையவனாக இருந்தான். இன்று தலையின் முன்பக்க மயிர்கொட்டி, மெழுகிட்ட முதிரை மேசைமேல் தலை காட்டி கொடுத்தது. முகமும், உடலும் உப்பி மினுமினுத்தன.

கிருபைக்கு சேரின் தடுமாற்றம் விளங்கி விட்டது. 'சேர் நான்தான் கிருபைராஜ்,' என்றதும் அன்பு சேர் அன்புடன் அவன் கரத்தைத இறுகப் பற்றிக் கொண்டார். ஒரு கணம் உறைந்த நிலையில் நின்றார்.

''கடவுளே. என் கிருபையை எனக்கே தெரியவில்லை,'' என்றவர் அவனை அழைத்துக் கொண்டு தன்படிப்பறைக்குச் சென்றார்.

படிப்பறைக்குள் சென்றதும் இருவரும் சிறிது நேரம் மௌனமாக இருந்தனர்.

''சேர் இந்தாங்க,'' என்று கொண்டுவந்த பொதியை அவரிடம் நீட்டினான். அவர் அதை வாங்கி மேசையில் வைத்தார்.

''சேர், அதைப் பிரித்துப் பாருங்கோ,'' என்றான் அவரோ அதைப்பற்றிக் கவனிக்காமல் அவனைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினார்,''

''சேர், நீங்க கட்டவிருக்கும் சிறுவர் நூலகத்துக்காக இந்தியா சென்று வாங்கி வந்தனான் என்றான்.

'சிறுவர் நூலகம்' என்றதும் அவரின் ஆவல் அதைப் பிரிக்கத் தூண்டியது.

'சிறுவர் நூலகம்' அன்பழகன் சேரின் நீண்டநாள் கனவு கல்வியில் அக்கறை குறைந்து வரும் சிறுவரின் அறிவுக்கு உரம் இட நூலகத்தைப் போல் சிறந்த ஊக்கி எதுவுமில்லை என்பது அவரின் திடமான நம்பிக்கை. அதற்காக அவர் அயராது உழைத்து வருகிறார். கிருபையின் வரவால் அவரது இலட்சியம் நிறைவுறப் போவது கண்டு மகிழ்ச்சி கொண்டார்.

சேர் பொதியைப்பிரித்தார். அதனுள் அழகான அழகன் கைவிரித்தபடியே இருந்தான். சேரின் வதனம் மகிழ்ச்சியால் பூரித்தது.

அழகனை இரு கையாலும் எடுத்து முத்தம் கொடுத்து மேசையில் வைத்து அவனை இரு கண்களும் அகலவிரியப் பார்த்து ''இந்த அழகனைக் காண ஆயிரம் கண் வேண்டும்,'' என்று இராகத்துடன் பாடினார்.

''எங்கள் குழந்தைகளுக்குப் பாதுகாவலராக இந்தப் பாலயேசுவைத் தந்த உன்னை வாழ்த்த ஆயிரம் வாய் வேண்டும்,'' என்று ஆனந்தம் பொங்க சேர் கூறினார்.

(யாவும் கற்பனை)

# ஒளி விழாவில் நாடகங்கள்

இறைமகன் இயேசுபிரானின் அழியாத ஒளிவாழ்வை அடிநாதமாகவைத்து, சமுதாய வாழ்க்கையில் மனிதமான் புகள் மறுமலர்வு பெறவும், புனிதமுறவும் வழிகாணும் உயர் நோக்குடன் யாழ் மறைமாவட்டப் பொது நிலையினர் நடத்திய நாடகப் போட்டி எதிர்பார்த்தவாறாய்ப் பன்மடங்கு சிறப்புடன் இனிதே நிறைவு பெற்றது.

யாழ். மறைவட்டப் பங்குகளிலிருந்து நவமணிகளாக ஒன்பது நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. இன்னல்கள் நிறைந்த இன்றைய சூழ்நிலையின் மத்தியிலும் எதிர் நீச்சலிட்டுப் பேரார்வத்துடன் போட்டியிற் கலந்து கொண்ட நாடகக் குழுவினரையும், அவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் உதவிய பங்குகளின் அருட்குரவர்களையும் வாயார மனமார வாழ்த்தல் வேண்டும்.

நாடகம் ஒவ்வொன்றிலும் ஆழமான கருத்துச்சுடர்கள் மிளிர்ந்தன. ஆன்மநலந்தரும் படிப்பனைகள் உதிர்ந்தன. அற்புதமான கற்பனை வளங்கள் பொலிந்தன. உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிகள் ஒளிர்ந்தன. நாடகக்கலையின் புதிய புதிய உத்திகள் நிறைந்திருந்தன.

எண்ணற்ற சிரமங்களையும், செலவினங்களையும் பொருட்படுத்தாது, பரிசையும், பாராட்டையும், வெற்றியையும் தோல்வியையும் சிறிதளவும் கருத்திற் கொள்ளாது, பரந்த மனப்பண்புடன் போட்டிகளிற் பங்கெடுத்த இயக்குனர்களையும், கலைஞர்களையும், அவர்தம் கடமையுணர்வையும் திருமறைச் சேவைத் தாகத்தையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

காலச் சூழ்நிலை காரணமாக நாடகங்களில் யுவதிகளே பெரும்பான்மையினராகப் பங்குபற்றியதையும் அவதானிக்கக் கூடியதாயிருந்தது. எதிர்காலத்தில் இக்குறைபாடு தவிர்க்கப்படுமென எதிர்பார்க்கலாம்.

பொதுநிலையினர் மத்தியில் மறையுணர்வைப் பெருக்கக் கலைகளும் அருந்துணைபுரிகின்றன என்ற உண்மைக்கு அரங்கேற்றப்பட்ட நாடகங்கள் அனைத்தும் அழியாச் சான்றுகளாய் அமைந்தன.

இத்தகைய புதிய கண்ணோட்டத்துடன் மறைப்பணியிற் பீடுநடைபோடும் நிருவாகிகளின் நன்முயற்சிகள் பெருகவும், நற்பயன்நல்கவும் நாம் அனைவேமும் ஏகமனதாக ஒத்துழைக்க முன்வரல் வேண்டும். (ம ழ். ஜெயம்)

# மறையுடல் பிறந்த கதை

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரு சகோதரர்களும்
விசுவாசிகள் ஒன்று கூடவும், வழிபடவும்
தம் வீட்டில் இடமளித்தனர்,
வேதசாட்சிகள் உடல் புதைக்க
தமது தோட்டங்களில் கல்லறை தந்தனர்.
விஷயங்கள் விரைவில் சிறகடித்தன.
அவர்கள் கைதாயினர்.
வாளை அவர்கள் வரவேற்ற மகிழ்வு கண்டு
காவலாளியும் கத்தோலிக்கனானான்.
அவர்களுடனேயே உயிரும் விட்டான்.
பின்பு சிசிலியா கைதானாள்.
சித்திரவதைகளை மகிழ்வுடன் தாங்கி
மும்முறை வாளால் வெட்டப்பட்டு
மூன்று நாட்களின் பின் உயிர் நீத்தாள்.
மார்குஸ் அவுரேலியுஸ் ஆட்சி
கி. பி. 180 வரை நீடித்தது.

# நன்மையாலே நலமே உண்டு

வானிறைவன் படைப்பிலெல்லாம்
வனப்பு உண்டு
வளருகின்ற அன்பி லெல்லாம்
பிணைப்பு உண்டு
தன் னலமேயில்லா சேவை யெல்லாம்
தளைப்ப துண்டு
தனக்கே சேர்த்து வைப்பதினால்
தகிப்பே உண்டு
அன்பு செய்யும் உள்ளந்தனிலே
அக மகிழ்வு உண்டு
அறத்தின் வழியில் நடந்தால் என்றும்
அமைதி உண்டு
வம்புச் செய்கை வாழ்வில் என்றும்
வளர்ச்சி இல்லை
வாய்மை இல்லா வாழ்வில் என்றும்
வளரும் தொல்லை
உலகம் காட்டும் பாதை எல்லாம்
உண்மையும் இல்லை
உண்மை இறைவன் வார்த்தை என்றும்
காட்டும்நற் பாதை
நன்மை செய்து வாழ்ந்தால் என்றும்
நிறைவே உண்டு
நாட்டில் நீதி ஆட்சியாலே
நலமே உண்டு,

— அ, பீற்றர் ராஜன் —
யாழ். மறைக்கல்வி நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் உலகம்

# தளத் திருச்சபையும் இளைஞர்களும்

இன்று இளைஞர் உலகம் - இளைஞர் ஆண்டு - இளைஞர் ஆட்சி என்று எத்தனையோ வகையான அழைப்புக்கள் வெளிவருகின்றன இளைஞர்களின் இதயங்களை கவர்ந்தெடுக்க பல இதமான - விதமான வார்த்தைகளும் புறப்பட்டு விட்டன. இளைஞர்களின் சக்தி அவர்களின் புத்தி உலகைத்திருத்த, உலகை மறுமலர்ச்சியாக்க, புரட்சிப்பாதையிலே புது உலகம் படைக்க வேண்டப்படுகின்றன அரசியலிலும் இளைஞர்களுக்கு இன்று முதலிடம் கேட்கப்படுகின்றது. அண்மைக்காலத்தில் உலகில் பல பகுதிகளிலும் இளைஞர்கள் முக்கியப் படுத்தப்படுகிறார்கள், அன்று சீனாவிலே ஒரு புரட்சி இளைஞர்கள் தான் அதனை உருவாக்கினார்கள். இன்று நம் நாட்டிலும் பெருபபுரட்சி. எதற்காக? உரிமையைப் பெற்று வாழவா? அல்லது நீதியை வளர்க்கவா? அல்லது உண்மையை நிலைநாட்டவா? உயிரைப்போக்கவா? உயிர்களை மாய்க்கவா?

சிந்தனைக்குரிய விடயம். சிந்திக்க வேண்டிய கேள்விகள். யார் சிந்திப்பது? இன்றைய இளைஞர் யுவதிகளே சிந்திக்க வேண்டியது. நான் யார்? உர்மை 'உண்மை' நீதி எங்கே மறுக்கப்படுகின்றதோ அங்கே தான் இளைஞன் குரல் கேட்கிறது. ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்ட சந்ததியாக ஓர் இனம் இன்னோர் இனத்தை மண்டியிடச்செய்யும் மக்களாக மாறும் போது நீதியின் குரல் ஒலிக்கிறது. பார்வோன் ஆட்சியிலே இஸ்ராயேல் அனுபவித்த வேதனைக் குரல் - மோயீசன் என்ற இளைஞன், அடிமையாட்சியை அழிக்க தன் சுக போகம் அனைத்தையும் துறந்து முன் வந்தான். இறைவன் குரல் கேட்டான். இஸ்ராயேலரை மீட்டான். புதியதோர் நாட்டைக்கண்டான். புதுமைமிக்க இறைவனைக் கண்டான். காலம் செல்லச் செல்ல மனிதன் இறைவனை மறந்தான் அங்கே தான் ...... பகைமை பொறாமை - போர் - முடிவு- அழிவு. மோயீசனின் பின் எத்தனை இறைவாக்கினர் குரல்கள். உயிர்கள். ஈற்றில் உலகுக்கு உயிர் கொடுத்த இஸ்ராயேலர் குலத்திலே உதித்தது ஓர் இளம் ஞாயிறு - இளஞ்சிங்கம் - இளம்மறி - செம்மறி உயிர் கொடுத்து ஒளிரப்பியது. இறைவாக்கினர் இசையாஸ் முன் மொழிந்த குரல் ஆண்டவருடைய ஆவி என் மேலே ஏனெனில் என்னை அபிசேகம் செய்துள்ளார்; எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் குருடர் பார்வைபெறுவர், என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார். இதுவே ஓர் இளைஞன் குரல். நற்செய்தி ஏட்டில் ஏசுமொழிந்த குரல். இதைச் செய்வது தான் இன்றைய இளைஞன் பணி.

குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை, பல குடும்பங்களை இணைத்ததே ஒரு பங்கு. பல பங்குகளை இணைத்த ஒரு எல்லைப்பரப்பே தளத்திருச்சபை. இத்திருச்சபையில் எத்தனை எத்தனை இளைஞர் குரல் – கிறிஸ்துவின் குரல் கேட்க குரல் கொடுக்கின்றனர். நல்ல ஆயன் நானே இக்கிடையைச் சேராத வேறு ஆடுகளும் எனக்குண்டு. அவைகளையும் நான் கூட்டிச சேர்க்க வேண்டும். அவைகளும் என் குரலுக்கு செவி கொடுக்கும். ஒரே மந்தையும். ஒரே மேய்ப்பனும உண்டாகும் என்ற கிறிஸ்துவின் குரலுக்கு செவிமடுக்கும் நம் இளைஞன் யார்?

ஒவ்வொரு குடும்பமென்னும் குட்டித்திருச்சபையினைப் பாதுகாத்து விசுவாச விளக்கேற்றி, குட்டித்திருச்சபையாக்க குடும்பமென்னும் பொறுப்பேந்தும் நம் இளைஞர்கள், பங்கு திருச்சபையிலும் தளத்திருச்சபையிலேயும் தான் பொறுப்பற்ற விதமாக சாத்தானின் ஏவுதல்களுக்கு தூண்டப்பட்டு நல்ல ஆயனின் குரல் தரும் ஆயர்களுக்கு விரோதமாக நடப்பது கண்கூடு. கிறிஸ்தவ இளைஞர்கள் மத்தியில் ஒன்றிப்பை குலைக்கும் சக்திகள் வளர்கின்றன. குடும்பங்களை சீர்குலைத்து இளைஞர்களில் தவறான - தப்பான போதனைகளை வளர்க்கின்றன. இவற்றை முறியடித்து உண்மையை மக்களுக்கு, உலகுக்கு வழிகாட்ட கிறிஸ்துவின் சத்திய திருச்சபையைச் சேர்ந்த நான் இளைஞனாக கிறிஸ்துவாக குரல் கொடுத்தேனா? நற்செய்திப்பணியை நற் [illegible] வைப்போன்று நறசெய்தியைப் போதிக்க, உரிமைக்கு குரல் கொடுக்க, சிறைப்பட்டோர்க்கு வாழ்வளிக்க உண்மை நீதிக்கு தன்னை அர்ப்பணிக்க முன் வருகின்றேனா? அறியாமை - மடமை போக்கி உண்மை விசுவாசத்துக்கு உழைக்க - உண்மைப் போர் வீரனாக உறுதி பூசுதல் வழியாகப் பெற்ற உறுதியை உரிமையை வளர்க்க துணிந்து போராடுகின்றேனா?

சிதறிய மந்தையை ஒன்று சேர்க்க என் உயிரைக்கொடுக்கின்றேனா? ஆன்மீக சமுதாய-அரசியல் பொருளாதார வாழ்வு அனைத்திலும் நான் கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்ந்தேனா? இன்றைய இளைஞரே! சிந்தித்துப்பாருங்கள். நடந்து வந்த பாதையை திருப்பிப் பாருங்கள் இனியாவது திருந்தி வாழுங்கள்.

ஆம் புறப்படு இளைஞனே! தளத் திருச்சபை அழைக்கிறது. தன் துன்பங்கள் போக்கி விடிவிக்க ஒளியில் வளர - எதிரிகளை விரட்டி அடிக்க இன்றே நாம் வீரராகப்புறப்படுவோம். நாளை அல்ல இன்றே புறப்படுவோம். ஒன்று சேருங்கள் இளைஞரே!

செல்வி. எஸ். ஜெனோவா
மன்/ உயிலங்குளம் R.C.T.M.
பாடசாலை.

மணிக்கதை

## மௌனம்

### [ வளவை வளவன் ]

சிவமரணப் போராட்டத்தில் துடித்துக் கொண்டிருந்த நோயாளி ஒரு டாக்டரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

ஆறு பிள்ளைகளின் தாய். "ஐயா இவளை எப்படியும் காப்பாற்றித் தாருங்கள்" அந்த நோயாளிப் பெண்ணின் கணவன் இறைஞ்சினான்.

டாக்டர் பலமுறை அந்த நோயாளியின் உடலைப் பரிசோதித்து "எப்படியும் நான் இவளைக் காப்பாற்றுவேன்" என்று உறுதியளித்தார்.

எப்படியும் காப்பாற்றி விடுவார் என்று அந்த நோயாளியின் கணவனும் நம்பிக்கொண்டு, அவளுக்குத் தேவையான பொருட்களை வாங்கிவரச் சென்று விட்டான்.

நோயின் பலம் அதிகரித்தது. சுவாசத் தடுமாற்றமும், வலிப்பும் எழுந்து டாக்டருக்குச் சவால்விட்டது.

டாக்டர்...நர்ஸ் எல்லோரும் கூடினர். அவசர அவசிய சிகிச்சைகள் நடந்தன.

செயற்கைச் சுவாசம் ஒரு புறமாகவும், குளுக்கோஸ் மறுபுறமாக ஏறிக்கொண்டிருந்தது.

நிமிடங்கள் யுகங்களாகி நகர மறுக்கின்றன.

நோயாளியின் இதயமும் துடிக்க மறுத்துவிட்டது.

வெளியே சென்றிருந்த அவள் புருசன் கைநிறைந்த பொருட்களோடு ஓடிவந்தான். மனைவி இறந்து கிடப்பதைக் கண்டு துடித்தான், கதறினான். டாக்டர் நீங்கள் சொன்னதென்ன? பரிதாபமாகக் கேட்டான் டாக்டரிடம்.

மரணத்தை வென்றெடுக்க வழியுண்டா? டாக்டரின் மனதில் எழுந்த கேள்விக்குப் பதிலாக டாக்டரும் ஒரு நாள் மரணிக்கப் போபவரே என்ற மனக்குரல் எதிரொலியாக ஒலித்துக் கொண்டது.

எதையுமே பேசமுடியாது எம்மையும் தாண்டிய ஓர் சக்தி இருப்பதை உணர்ந்த டாக்டர் மௌனியாக வெளியேறினார்.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-54

அடைக்கலம்: கோயில் புதுவருசத்தோட நிரம்பின சனம், ஏன் அண்ணை அடுத்த அடுத்த ஞாயிற்றுக் கிழமை பூசையில அவையளைக் காண முடியேல்ல?

குருசுமுத்தண்ணை: அடதம்பி. இதென்ன புதுக்கக் கேக்கிறாய். இனி அடுத்த நத்தார் புதுவருடத்துக்குத் தான் காணலாம் பாரு.

அடைக்கலம்: அப்ப வருசம் ஒருக்காத்தான் வருவினமே அண்ணே?

குருசுமுத்தண்ணை: இல்லை, இப்பிடி முக்கிய தினங்களில மட்டும் தங்களையும் வேதக்காறர் எண்டு காட்டிறதில ஒரு பெருமை பாரு.

# மக்கள் குரல்

## ஆன்மீக 'விடுதலை

இன்று உலகின் அட்டதிக்குகளிலும் விஞ்ஞானத்தில் வீறுநடை பயின்று கொண்டிருக்கும் விஞ்ஞானிகள், ஆயுத உற்பத்தியை அதிகரித்து அணுப் பரிசோதனைகளை அடிக்கடி நடாத்தி வருவதனால் இறைவனால் படைக்கப்பட்ட மனித உயிர்கள் மதிப்பற்ற விலங்குகளைப் போன்று வீதிகளில் வீணாகக் கொன்றுகுவிக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் "நான்" என்ற அகந்தை குடி கொண்டதேயாகும். இதனால் இன்று உலகில் மெய்ஞானம் மறைந்து, அஞ்ஞானம் குடி கொண்டுவிட்டது. அன்றியும் பஞ்சமா பாதகச்செயல்களும் உலகின் பல மூலை முடுக்குகளிலும் மலிந்து காணப்படுகின்றன.

ஆம், மனிதனின் உயிர் உடலில் இருக்கும் மட்டும்தான் அவனது ஆட்டமும், ஓட்டமும் இருக்கும். ஆனால் அவனது உயிர் உடலைவிட்டுப் பிரிந்து விட்டால் அவனது உடலைப் பிணம் எனக்கருதுகின்றோம், மனிதன் இறந்த பின் அவனது ஆன்மாவின் நிலைதான் என்ன ஏன் நாம் படைக்கப்பட்டோம், என்பதை எம்மனிதனாவது சிந்தித்ததுண்டா?

"வீடுவரை உறவு, வீதி வரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசிவரையாரோ" என அழகாகப்பாடியுள்ளான் ஒரு கவிஞன். ஆம், எமது இறப்பின் பின் மனைவியோ, மக்களோ, அல்லது பட்டமோ பதவியோ, அன்றேல் அதிகாரமோ, எம்மைத் தொடர்ந்து வரபபோவதில்லை. ஆனால் நாம் இவ்வுலகில் செய்த நற்கிருத்தியங்களும், தீச்செயல்களுமே எம்மைத் தொடர்ந்து வரப்போகின்றது.

மனிதா! நீ நன்றாக ஊன்றிச்சிந்தனை செய்து பார்! நீ இன்று இறந்தால் உன் ஆன்மாவின் நிலைதான் என்ன? நீ பாவச்சகதியில் புரண்ட நிலையில், திடீரென உன் உயிர் காலனால் கவரப்பட்டால், உனக்குக்கிடைக்கப் போகும் பயங்கரத்தண்டனை தான் என்ன?

"நீ உலகமெல்லாம் உன தாக்கிக் கொண்டாலும், உன் ஆன்மாவைச் சேதப்படுத்துவாயானால் அதனால் உனக்குக்கிடைக்கப்போகும் பயங்கரத்தண்டனைதான் என்ன? நாம் விடுதலைப் போராட்டத்தில் வீரமரணம் அடையலாம், அதனால் உலகில் பேரும், புகழும் கிடைக்கலாம். அன்றேல் அரசியல் போராட்டத்தில் குதிக்கலாம், அதனால் பெருமையும், கீர்த்தியும் கிட்டலாம், ஆனால் அவையனைத்தும் இவ்வுலகில் கிடைக்கும் விடுதலையாகும். ஆனால் அவ்வேளை எம் ஆன்மாவின் நிலை தூய்மையற்றிருப்பின் இவ்வுலகில் விடுதலைப் போராட்டத்திலும், அரசியல் போராட்டத்திலும் பெருமையும், கீர்த்தியும் கிடைப்பினும் மறு உலகில் எமது ஆன்மாவிற்கு நிட்சயமாகவே விடுதலை கிடைக்கவே கிடைக்காது.

எனவே ஆன்மீக விடுதலைக்காக முன்னின்று உழைத்த விடுதலை வீரர்களை நாமும் பின்பற்றி ஆன்மீக விடுதலைக்காக உழைக்க முன்வருவோமாக!

ச. அன்ரன் சேவியர்
யாழ். புனித சவேரியார்
குருமடம்.

## பொன் மொழி

"எள்ளத்தனை நன்மாதிரிகை மலையத்தனை வார்த்தைகளை விட மேலானது"

– புனித பிரான்சிஸ் சவேரியார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




திருமறைப்பணி நிலையம், த பெ. இல. 2, யாழ்ப்பாணம்.

அருள்வாக்கு வாசக நேயர்களுக்கு,
எனது அன்பான வாழ்த்துக்கள்!

''திருமறைப்பணி நிலையத்தின்'' பல்வேறு பணிகளிலே, ''காவலன்'' வாசகர்களுக்கும், கடந்த மூன்று ஆண்டு காலமாக எமது சேவையினைச் செய்து வந்தோம் என்பதனை நீங்கள் அறிந்ததே!

''திருநூலை அறியாதவன் - கிறிஸ்துவை அறியாதவனே.'' என்பதற்கிணங்க - திருநூல் என்னும் ஆழ்கடலிலே மூழ்கி, ஒரு சில முத்துக்களை எடுத்து மூன்றாண்டு காலமாக உங்கள்முன் பரப்பி வைத்தோம!

இத்தகைய அரியபணிக்கு எமது நிலையத்தோடு ஒத்துழைத்த ''முழுநேர மறை ஆசிரியர்கள்'' - ''சகோதரக்குருக்கள்'' ''அருட்செல்வர்கள்'' ஆகியோருக்கு வாசகர்களாகிய உங்கள் சார்பிலும் - எமது நிலையத்தின் சார்பிலும் நன்றிகூறி நிற்கின்றேன்!

இதுவரை, பழைய ஏற்பாட்டின் 47 நூல்களையும் பல்வேறு கோணங்களில் உங்களுடன் பகிர்ந்து கொண்டோம். ''வரலாறுகள்'' என்பதிலும் வரலாற்றின் பின்னணிகளை ''அறிந்து கொள்ளுங்கள்'' என்ற பகுதியிலும் - திருநூல - எமது நூல் என்று விளக்க ''பழமொழியுடன் ஒப்பிட்டு நாம் நாடும் முதுமொழி''களையும தந்துதவினோம்!

மூன்று வயதைக் கடந்து நான்காம் வயதிலே அடியெடுத்து வைக்கும் இச்சேவையினை வளர்ப்பது - வாழ்விப்பது உங்கள் கடன்.

இவ்வாண்டிலே புதிய ஏற்பாட்டின் வரலாறுகளை - வரலாற்றுப்பின்னணிகளைப் புதுமெருகுடன் தர முன்வந்துள்ளோம். சேவையை வளர்க்க - திருத்த - அறிவுரை ஆலோசனை வழங்க, வாசகர்களாகிய உங்கள் ஒத்துழைப்புத் தேவை!

புதிய எழுத்தாளர்களை வரவேற்கிறேன்.
வாசகர்களாகிய உங்களை வாழ்த்துகிறேன்.

இறையாசீர் வேண்டி .........
இயக்குநர்
அருட்திரு. ஆர். எச். சகாயநாயகம்

## அன்னை அவளே! அடைக்கலம் எமக்கே!!

கனிவு தவழ எமையெல்லாம்
காத்து நிற்கும் அன்னையவள் ......
காலமறிந்து கைகொடுக்கும்
காணிக்கை அன்னை அவளன்றோ ......

வருவார் பலர் கேட்பார்பல
வாரி வழங்கும் வள்ளலாக .........
வான் முட்டும் வலசெயல்கள்
வாஞ்சையுடன் அருள்பவள் அவளன்றோ.



வரங்களோ பலவகை
வழங்குபவரோ ஒருவர்தாம் ......
வரங்கள் பல அவள் வழியாய்
வழங்குபவர் பரமன் தாமே ......

பார்புகழ பண்தவழ
பார்போற்றும் அன்னையாக .........
பரலோக இராக்கினியாம்
பரவசமே! எமில்வருக!' .........

எஸ். ஏ. குமார்
கரம்பொன்

### இன்றைய பெண்களுக்கு முன்மாதிரிகையாக
## விவிலியத்தில் சில பெண்கள்

1. மரியாள் —இறைவனின் தாய்.
2. யூதித் —அறத்திற்கு புகழ் பெற்றவள்.
3. சாராள் —அன்புக்கும், அமைதிக்கும் புகழ் பெற்றவள்.
4. ஆகார் —பணிவிடை புரிவதில் சிறப்புப் பெற்றவள்.
5. ரெபேக்காள்—தாய்மைக்கோர் இலக்கணம்.
6. ரச்கேல் —இறையாளருக்கு முன்னோடி.
7. யூதித் —வீரத்திற்கு எடுத்துக் காட்டு.
8. எஸ்தர் — அறிவும், பண்பும் கொண்டவள்.

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்

வாசக உள்ளங்களே!

ஆண்டின் இறுதிக்கட்டத்திலே காலடி எடுத்து வைத்துக் கொண்டு இருக்கின்றோம். இந்த ஆண்டிலே நாம் சந்தித்தவைகள்...? அப்பப்பா! இழப்புக்கள் - தவிப்புக்கள் - இடிபாடுகள் - அழிவுகள். கங்கையிலும் - கடலிலும் மனித உடல்கள் மிதப்புக்கள்...... 'போதுமடாசாமி என்று கூறும் அளவிற்கு எல்லாவற்றையும் சந்தித்து விட்டோம்!

அத்துடன் முடிந்து விட்டனவா...? என்ற ஏக்கப் பெருமூச்சு நமது உள்ளத்தில் எழாமல் இல்லை! இதற்கு இன்று திருநூல் கூறுவது...?

''மனிதனின் உள்ளத்தில் - சிந்தனைகள் பலவாம் ஆனால் ஆண்டவரின் திருவுளமோ, நிலைபெற்று இருக்கும்'' என்று 19/20 ல் இறைத்திட்டத்தை ஏற்குடபடி அறிவுரை கூறுகிறார்,

இதற்கு நமது முதுமொழியாளர் - ''உண்மையான - தூய்மையான மனதிலிருந்து வரும் பிராத்தனையை கடவுள் உடனே கேட்கிறார்'' என்று எமது மனச்சாட்சியைக் கிளறிவிட்டு சிந்திக்க வைக்கின்றார்கள்! உண்மைதானே?

நமது ஜெபங்கள் வெறும் வாய்ச்சொல்லில் மட்டும் அடங்கி விடுகின்றனவா? இல்லை - உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்படுகின்றனவா...? சற்று சிந்திப்போமா?

இன்னொன்றையும் கவனியுங்களேன்... ''சித்த சுத்தி என்பது மனத்தூய்மை! அது தெல்வம் உறைய வழி'' என்றொருமுதுமொழி உண்டு. நாம் இறைவனைக் கண்டடைய பல்வேறு முயற்சிகளிலே ஈடுபடுகின்றோம், முக்கியமாக இந்த நாட்களிலே எமது மாணவர்கள் தங்கள் பரீட்சைக்கும் - எதிர்பார்ப்புகளுக்கும் இறைவனைத்தேடி அலைகிறார்கள்.

இக்காலக் கவிஞன் கூறுகிறான் ''இருக்கும் இடத்தை விட்டு - இல்லாத இடந்தேடி எங்கெங்கோ அலைகிறான் - ஞானத்தங்கமே!'' என்று.

நம்மை வாழ்விப்பதும் - பாதுகாப்பதும், நிறைவடையச் செய்வதும் இறைவார்த்தை தானே? இவற்றில் நம்பிக்கை கொண்டு புரட்டுங்களேன் 19/23-ல்
'தெய்வபயம் - வாழ்வின் வழி அது யாதொரு தீமையும் நேரிடாமல் காத்திட எப்பொழுதும் நிறைவு கொள்ளச்செய்கிறது''

எவ்வளவு ஆழமான - அர்த்தமான வார்த்தை. வார்த்தையில் வாழப்பழகிக் கொள்வோமா...?

### வாரம் ஒரு சிந்தனை:

''நினைக்கின்ற படி நடக்கவில்லையே - என்பதற்காக நினைப்பதை நிறுத்தி விடாதே''

அன்புடன்




| ஒளி: 4 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| சுடர்: 3 | எம் வாழ்வின் வழி யேசு |

### விழி வழி !

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு ஒரு தும்பிலும பலம் குறைந்த பல தும்புகளின் திரிவால் உருவான கயிறு பலமிக்கது. ஒரு ஈக்கிலை எளிதில் ஒடிக்கலாம். பல ஈக்குகளைச் சேர்த்தால் ஒடிக்கமுடியுமா? வீட்டில் ஒற்றுமை இல்லாவிடில் நாட்டில் ஒற்றுமை வருமா? கல்விக் கூடத்தில் வகுப்பறையில் ஒற்றுமை இல்லாவிட்டால் கல்விக்கூடம் கலகக்கூடமாக மாறிவிடும். உதைபந்தாட்டக்குழுவில் ஒற்றுமை இல்லாவிட்டால் வெற்றி கிடைக்குமா? ஒற்றுமையின் பெருமையை எழுத்தில் எழுதுவது எளிது. ஆனால் அதனை ஒற்றுமையைவாழ்வின் வழியாக்கச் சிறு வயதிலே, அதாவது இப்பொழுதே பெற்றோர், ஆசிரியர் பெரியவரிடம் இருந்து கற்றுக்கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாகத் தினத் திருப்பலி கண்டு, இறைவழி மூலமாக ஒற்றுமை உணர்வை உங்களுள் வளர்த்துக் கொள்ள வாழ்த்தும்,

அன்பின்—அன்பு விழி

### மனித சுபாவம்:

அன்பும், மரியாதையும் கொண்டு இருப்பவன் இந்தஉலகத்தில் எதையும் சாதித்து விடுவான். பகைமை காட்டுபவனும் அவனிடம் பணிந்து போவான்.

வாழ்க்கையில் கொஞ்சமாகச் செல்வம் வைத்திருப்பவனை ஏழை என்று சொல்ல முடியாது. ''இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும்'' என்று ஏங்குகிறவன்தான் என்றைக்கும் பிச்சைக்காரன். ஒரு முழு சாம்ராஜ்யத்திற்கு அவன் அதிபதியாக ஆகிவிட்டிருந்தாலும் சரி, அவன் பிச்சைக்காரன்தான், என்று சொன்னால் மிகையாகாது. எனவே ஒன்றே குலமென நாம் வாழ்ந்து மதங்களை நன்கு கடைப்பிடித்து அவற்றின்படி ஒழுகி சமத்துவமாய் வாழ்வோம், வாழவைப்போம், பலரைக், குறைகள் பலகூறி குவலயத்தில் குறைக்காது மனித மாண்பை மதித்து வாழ்வது சிறப்பான ஒரு பண்பாகும்.

தியோகு சந்தியோகு—A/1

### அங்கத்துவம்:

(12 ஆம் ஆண்டுக்கு 11இலிருந்து) அங்கத்துவம் பெற்றவர் பாடசாலை விலகியவர் அல்லது ஆண்டு 12இற்கு சென்றவர் ஆக்கங்களை அனுப்பும் போது உங்கள் அங்கத்துவ எண்ணுடன் 'B என்பதையும் சேர்த்துக் குறிக்கவும். நீங்கள் இப்பொழுது கௌரவ அங்கத்துவத்தைப் பெற்றுவிட்டீர்கள் என்பது இதன்மூலம் அறியப்படும்.

★ ★ ★

### அழகிய தமிழே ! பேசு

மண்ணின் மைந்தா ! நீ பேசு
மழலை மொழியில் நீ பேசு
அன்பின் அழகே !—இனிதான
அமுதத் தமிழில் நீ பேசு

இன்பத் தமிழிற் கிணையாக
இத்தரணியில் யாருண்டோ ?
கன்னல் தமிழில் கசிந்துருகி
கனியும் கவிதை நானானேன்.

சிந்தனை சிதற நீ—மன
சின்னம் சிறுசே நீ பேசு
வண்ண மயிலே வாய்திறந்து
வளரும் தமிழில் நீ பேசு

அன்ன நடையை அடியொற்றி
அழகுத் தமிழே விளையாடு
சின்னக் குழந்தை சிரிப்பாக
சிதறும் தமிழே ! நீ வாழ்க.

சூ. யூடிற் லலினி
அ. எண்/188.

### சிரி...சிரி...சிரி...

மாணவன்: சேர்...ஆண்டவர் யேசு பேசிய மொழி என்ன ?
ஆசிரியர்: அரமாய் மொழி.
மாணவன்: அப்ப...நாம சொல்லும் செபங்கள் எல்லாம் எப்படி அவருக்கு விளங்கும்...
ஆசிரியர்: சிந்திக்க வேண்டிய கேள்வி...அடுத்த கிளாசிலே சொல்லுகின்றேன்...

அன்புக் குழந்தை—முருங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ்ரியன் கல்வி உதவித் திட்டத்தின் புலமைப்பரிசில்

பஸ்ரியன் கல்வி உதவித்திட்டமானது 1990 ஆம் ஆண்டிலிருந்து க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்து உயர்கல்விக்குத் தகுதியுடைய, வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவி வழங்கும்முகமாக 10 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. க. பொ. த. (உயர்தரம்) கல்வியை தொடருவதற்காக இரண்டு வருடங்களுக்கு இவ் உதவி வழங்கப்படும். யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்டங்களில் 5 வட்டாரங்களுக்கும் தலா இரண்டு மாணவர்கள் வீதம் தகுதியான 10 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். விண்ணப்பங்கள் எதிர்வரும் மாசி மாதம் 20 ம் திகதிக்கு முன்னதாக பங்குத்தந்தை/வட்டாரக் குரு முதல்வர் மூலம் கீழ்வரும் விண்ணப்பப்படிவத்துக்கமைய விண்ணப்பதாரியின் கையெழுத்தில் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

* புலமைப் பரிசில்கள் பெறத்தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடன் தொடர்புகள் மேற்கொள்ளப்படும்.
* தெரிவு செய்யப்படும் மாணவரொருவருக்கு 500/- பணமாக வழங்கப்படும். தெரிவுசெய்யப்பட்டு, புலமைப்பரிசில் பெறும் மாணவர்களது கல்வி முன்னேற்றம் கிரமமாக அவதானிக்கப்படும். எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம் காணப்படாதவிடத்து அம்மாணவரினது கொடுப்பனவுத் தொகை உடன் நிறுத்தப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி

FR. J. Nicholas
"BEAS"
ST. Francis Xavier's Seminary
Colombogam
Jaffna.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

விண்ணப்பதாரியின் பெயர் :- .................................... பங்கு :- ....................
பிறந்த திகதி :- .................................... மறைவட்டாரம்:- ....................
முகவரி :- ....................................................................
பாடசாலை :- ....................................

**கல்வித் தகைமைகள்**

க. பொ. த. (சாதாரணதரம்) 1989 ம் ஆண்டு பரீட்சை முடிவுகள்.

| | பாடங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|
| 1. | .............................. | .................. |
| 2. | .............................. | .................. |
| 3. | .............................. | .................. |
| 4. | .............................. | .................. |
| 5. | .............................. | .................. |
| 6. | .............................. | .................. |
| 7. | .............................. | .................. |
| 8. | .............................. | .................. |

**குடும்ப விபரம்**

| | பெயர் | வயது | தொழில் | வருமானம் |
|---|---|---|---|---|
| தந்தை:- | .................... | .......... | .......... | .......... |
| தாய் :- | .................... | .......... | .......... | .......... |
| சகோதரர் :- | .................... | .......... | .......... | .......... |

மேற் குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்.

.................................... ....................................
பெற்றோர் / பாதுகாவலர் விண்ணப்பதாரி

★ பங்குத்தந்தையின் குறிப்பும், சிபாரிசும்.

....................................
பங்குத்தந்தை

★ வட்டாரக் குரு முதல்வரின் குறிப்பும், சிபாரிசும்

....................................
வட்டாரக்குருமுதல்வர்

A/19

## யாழ் மறைவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு நடாத்திய ஒளிவிழா நாடக சிறப்புப்போட்டி முடிவுகள்

யாழ் மறைவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு நடாத்திய ஒளிவிழா சிறப்பு போட்டி 12-12-89 மறைக்கல்வி நடுநிலையத்தில் நடாத்தப்பட்டது.

இப் போட்டியில் பங்கேற்ற ஒன்பது நாடகங்கள்.

கொழும்புத்துறை செபமாலை மாதா கோவில் - "புத்தொளி பிறந்தது"
சில்லாலை புனித யாகப்பர் பங்கு – "எமது மண்ணில் இன்று கிறீஸ்து"
மானிப்பாய் புனித அந்தோனியார் கோவில் - "வீதியில் பாலன்"
மயிலிட்டி ஆரோக்கியமாதா கோவில் - "எங்களுக்கு கிறிஸ்மஸ் எப்போ"
இளவாலை புனித அன்னம்மாள் பங்கு - "குடிலிலா மாளிகையிலா ஓர் ஒளி"
இளவாலை புனித யாகப்பர் பங்கு - இணைத்து வைத்தவர்"
மிருசுவில் புனித நீக்கிலஸ் பங்கு - "கண்ணாடி"
அரியாலை அன்பகம் - "எங்கே பிறப்பார் கிறீஸ்து"
யாழ். மரியன்னை பேராலயம் - "நடமாடும் புனிதர்கள்"

பொது நிலையினர் கழகம் பங்குத்தந்தையர்களின் உற்சாகத்துடன் பங்கேற்று சிறப்பித்தனர்.

### நாடகப்போட்டி முடிவுகள்

1 ஆம் பரிசு மிருசுவில் பங்கு "கண்ணாடி"
2 ஆம் பரிசு மயிலிட்டி பங்கு "எங்களுக்கு கிறிஸ்மஸ் எப்போ"
3 ஆம் பரிசு மானிப்பாய் பங்கு "வீதியில் பாலன்"

சிறந்த கதை : "இணைத்து வைத்தவர்" இளவாலை யாகப்பர் ஆலய பங்கு
சிறந்த நடிகர் : I குடிலிலா மாளிகையிலா ஓர் ஒளியில்-ஏழை மகன்-ரஜனி சிங்கராயர்
II இணைத்து வைத்தவரில் – தாய்
III வீதியில் பாலன் - பணக்கார மகள் P. ஜெனகா

நாடகப் போட்டியில் யாழ் ஜெயம், ஜெனம் செம்பியன் செல்வன் ஆகியோர் நாடக போட்டியின் நடுவர்களாக கடமையாற்றினார்கள். A/26

31 ஆம் நாள் நினைவு



திருமதி.
மாகிறற் டொமிங்குப்பிள்ளை
தோற்றம்: அழைப்பு:
02-02-1905 18-12-1989

!சீவியத்தில் நேசித்த உம்மை மரணத்தில் மறவோம்!

மதுரமான யேசுவே! உமது திருப்பாடுகளின் பெறுபேறுகளைப் பார்த்து எங்களுக்கு மிகவும் பிரியமான உமது அடியாளாகிய மாகிறற் டொமிங்குப்பிள்ளை அவர்களின் ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

136, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். A/17

31 ஆம் நாள் நினைவு



மலர்வு: உதிர்வு:
21-02-1928 27-12-1989

திரு. வ. பி. பொன்னுத்துரை

"இறப்பென்பது முடிவல்ல அது நிறைவாழ்வின் ஆரம்பமே. உமது பிரிவு எமக்கு அதிர்ச்சியும், வேதனையும் தருகின்றது. ஆயினும் இறை விசுவாசம் ஆறுதல் வழங்குகிறது."


இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்
நண்பர்கள்.

'யாழினி இல்லம்'
கரவெட்டி. A/18

31-ம் நாள் நினைவு
06-02-90

மண்ணுலகில்: 15-11-1952
விண்ணுலகில்: 07-01-1990

டாக்டர் அ. ஜே. குணசிங்கம்
(D. T. M. S.)



மதுரமான யேசுவே!
நீர் உம்மிடம் அழைத்துக்கொண்ட குணசிங்கத்தின் ஆத்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லா பிரகாசத்தையும் அளித்தருளும், சுவாமி ஆமென்.

இவரின் பிரிவால் துயருறும்,
அம்மா, அக்கா, அண்ணன்மார், அண்ணிமார், தங்கை, மைத்துனர்மார், பெறாமக்கள், மருமக்கள், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள்.

முல்லையடிவீதி,
பண்டத்தரிப்பு. A/23

## 1989-ம் ஆண்டு குட்டிக்கதைப் போட்டி

**பரிசுக் கதை முடிவுகள்**

1. ஆம் பரிசு—உயிரிலும் மேலான அன்பு
ஞா. றமி
கன்னியர் மடம் மகாவித்தியாலயம்.

2. ஆம் பரிசு—தேடி வரும் தெய்வம்
நாவண்ணன்.

3. ஆம் பரிசு—அனுபவ அன்பு
மரிஸ்ரெலா ரெங்கநாதன்
ம/ பு. ச. பெ. ம. ம. கல்லூரி (12-ம் வருடம்.)

ஆறுதல் பரிசு

தன்வினை தன்னைச் சுடும்
சலமோன் சகாயமலர்.
11-ம் வட்டாரம், தாழைத் துறை, நெடுந்தீவு.

சாத்தானின் நட்பும், நிமலனும்
T. விஜயராணி
கைத்தொழில் பேட்டை வீதி, அச்சுவேலி

பாவமன்னிப்பு
ம. றோமியல், ஆரோபணம்
D. 8 கிளிநொச்சி.

குட்டிக் கதைப் போட்டியில் 139 கதைகள் கிடைக்கப்பெற்றன. இப்போட்டியின் நடுவர் குழுவில் பிரதம நடுவராக விக்ரர் யாழ் ஜெயம் அவர்களும், உதவியாக பிலிப்நேரி தாவீது தாசன் அவர்களும், பல்கலைக்கழக மாணவன் சுதா அவர்களும் பங்கேற்றார்கள். A/26



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# கல்விக்காகப் போராடியவர்



இலங்கையின் முதல் சுதேசப் பேராயரும், முதல் கருதினாலுமான கருதினால் தோமஸ் கூறே அவர்களை கௌரவிக்கும் முகமாக அவரது 88 வது பிறந்த தினமாகிய டிசம்பர் 28-ம் திகதி இலங்கை அரசு ஒரு ஞாபகார்த்த முத்திரையை வெளியிட்டது. புனித லூசியா பேராலயத்தில் நடந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்ட ஜனாதிபதி ஆர். பிரேமதாச முதல் முத்திரையைப் பெற்றதோடு கருதினால் கூறேயின் நற்பண்புகளைப் பாராட்டினார்.

வைபவத்தில் உரையாற்றிய ஆயர் பேரவைத்தலைவர், பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ மத அடிப்படையிலமைந்த கல்விக்காக நடத்திய போராட்டத்தை எடுத்துக் கூறி, இன்றைய இளைஞர் கிளர்ச்சிகளைத் தீர்ப்பதற்கு திருத்தப்பட்ட முறையிலமைந்த சமயரீதியான பாடசாலைகளே உகந்தவை எனக்கூறினார்.

கருதினால் கூறேயும், ஜனாதிபதி பிரேமதாசவும் ஒரே கத்தோலிக்க கல்லூரியில் கல்வி பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரே பங்கில் பதினைந்து ஆண்டுகள்

''கடவுளின் அரசு மறு உலகத்திற்கு அன்று. இவ்வுலகத்திற்கு உரியது. எனவே கடவுளின் அரசை உய்த்துணர்ந்து வாழ வேண்டும்'' என கருணாகரன் அடிகளார் தமது உரையில் கூறினார்.

கடந்த 15 வருடங்களாக சாவகச்சேரி பங்கில் பங்குத் தந்தையாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அடிகளார் ஜோ. அ. கருணாகரன் அவர்கட்கு சாவகச்சேரி பங்கு மக்களால் பிரியாவிடை வைபவம் நடைபெற்றபோது அடிகளார் இவ்வாறு கூறினார்.

ஆசிரியர் அரியரட்டினம் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் சாவகச்சேரி கோத்தணி அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

வைபவத்தின் போது கருணாகரன் அவர்களால் எழுதப்பட்ட ''கிகோரியாரின் மன்றாட்டு மாலை'' என்ற செபப்புத்தகம் வெளியிடப்பட்டது.

# அன்னை திரேசாவின் பணிகளை முன்மாதிரிகையாகக் கொள்வோம்

### புனித வின்சன் டீ போல் சபையார் பொதுக்கூட்டத்தில் அனுராதபுர ஆயர்

அன்னை திரேசாவின் அன்புப் பணிகளை வின்சன் டீ போல் சபையாரும் பின்பற்ற வேண்டும் என அநுராதபுர ஆயர் அழைப்பு விடுத்துள்ளார்.

'உன்னைப் போல் உன் அயலானையும் நேசி' என்ற திருவாக்கிற்கு உதாரணமாய் இச் சபையினர் வாழவேண்டும். தன்னைத் தாழ்த்தி மற்றவர்களுக்காக வாழும் மனப்பக்குவம் வின்சந்தியர்களுக்குத் தேவை. அன்னை திரேசாவின் அன்புப் பணிகளை முன்மாதிரியாகக் கொள்வோம். சிறைச்சாலைகளைக் கூட நாம் தரிசிக்க வேண்டும். குற்றம் எதுவும், புரியாதவனும் தவிர்க்க முடியாத சந்தர்ப்ப சூழ்நிலையால் குற்றஞ்சாட்டப்பட்டு சிறைச்சாலையில் அடைபட்டு வருந்தக்கூடும். அத்தகையோரை நாம் சென்று சந்திக்கும் போது, அச்சந்திப்பு அவர்களுக்கு மன அமைதியைக் கொடுக்கும்'' என்று புனித வின்சென்ற் டீ போல் தேசிய சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம், டிசம்பர் 16 ஆம் திகதி கொழும்பிலுள்ள 6 ஆம் சின்னப்பர் நிலையத்தில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அநுராதபுரம் மறைவட்ட ஆயர் மேதகு. ஹென்றி குணவர்த்தனா ஆண்டகை கூறினார்.

இக்கூட்டம் சகோ. ஜி. ஏ. ஜி. அல்பிறட் சில்வா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இயங்கிவரும் 257 சகோதர பந்திகளின் பிரதிநிதிகள் 500 பேர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ். மத்திய சபையின் ஆன்ம இயக்குநர் அருள்திரு. S. H. ஜெயநேசன் அடிகளும் இதற்கு சமூகமாயிருந்தார்.

பிராந்தியங்களை ஒன்றிணைத்து ஐந்து துணைத் தலைவர்களை நியமித்தமை தெரிவின் புதிய அம்சமாக அமைந்திருந்தது.

## விவிலியப் பவனி

பாகிஸ்தான் விவிலியக் கழகத்தின் 125 ஆவது ஆண்டு விழாவை யொட்டி நடைபெற்ற விவிலியப் பவனியில் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கலந்து கொண்டனர். லாகூர் புரட்டஸ்தாந்து ஆயர் அலெக்சான்டர் யோன் மாலிக் பவனியைத் தொடக்கி வைக்கப் பாகிஸ்தான் விவிலியக் கழகத்தின் பொதுச் செயலாளர் D. V. ஹொகா இக்கழகத்தின் ஆக்கப்பணிகள் பற்றி உரையாற்றினார். விழா வினையொட்டி ஒரு விவிலியக் கண்காட்சியும் வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மலையகச் செய்திகள்

கடந்த மார்கழி 17-ந்திகதி பசறை குறூப்பாலத்துவ சபையினரால் மீதும்பிட்டிய புனித அந்தோனியார் கோவிலில் பசறை புனித யூதாததேயு ஆலயப்பங்கு குருவானவர் A. B. டொமினிக் என்பவரின் தலைமையின் கீழ் ஒளி விழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிகளில் நடனப்போட்டியும், பாடல்போட்டியும் நடத்தப்பட்டு திறமையாக வெற்றியடைந்தவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

R. T. செல்வி
பாலத்துவசபை
பொறுப்பாளர்.

கிளிநொச்சி பங்குத்தந்தையின்

## முக்கிய அறிவித்தல்

கிளிநொச்சி குழந்தை யேசு ஆலய கட்டிட நிதிக்கென அதிஷ்ட லாபச்சீட்டு ஆலய பரிபாலன சபையால் விற்பனை செய்யப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக விற்பனைக்கு அனுப்பப்பட்ட சீட்டுக்கள் திருப்ப பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாலும், விற்பனை செய்தவர்களோடு தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதாலும், சிறு தொகையே எம்மிடம் இருப்பதாலும் அதை உங்கள் பெயரால் ஆலய கட்டிட நிதிக்கு செலவிட தீர்மானித்துள்ளோம் என்பதையும், அதனை அதிர்ஷ்டம் பார்க்க முடியாமல் இருப்பதையும் மிகவும் மன வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

இதை நீங்கள் அனைவரும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வீர்கள் என எண்ணுகிறோம். 14-1-1990 காலை திருநாட் திருப்பலியைத் தொடர்ந்து ஆலய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது என்பதனை அறியத்தருகிறோம்.

A/08

## விடத்தல்தீவில் பிரிவுபசாரம்

''அருட் தந்தை பீற்றர் அடிகள் மக்களின் ஆன்மீக வாழ்விலும், பங்கின் முன்னேற்றத்திலும் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றினார் என்பதைத்தாம் காணக்கூடியதாயிருக்கிறது'' என்று விடத்தல்தீவுப்பங்கில் மூன்று வருடகாலமாகப் பணியாற்றி தமது சபையின் அழைப்பின் பேரில் இடமாற்றலாகிச் செல்லும், புனித பிரான்சிஸ் அசிசியார் சபையைச் சேர்ந்த அருட்திரு N. பீற்றர் அடிகளார்க்கு பங்கு மக்களால் பிரிவுபசாரம் நடத்தப்பட்டபோது அருட்தந்தை செபமாலை அடிகள் கூறினார்.

கொத்தணி அதிபர் திரு. S. சூசைப்பிள்ளை அவர்களும், அதிபர் திரு. P. பெனடிற் அவர்களும் "ஒற்றுமை சமாதானம், நிலவ வேண்டுமென துணிச்சலோடும், அக்கறையோடும் அரும்பணி புரிந்தார்'' என்று தெரிவித்தனர்.

### 10வீத தள்ளுபடி

எமது பத்திரிகை முகவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த 10% தள்ளுபடியை நூறு பத்திரிகைகளுக்கு குறைவாக விற்கும் முகவர்களுக்கும் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம். பத்திரிகை விற்பனையில் முகவர்களுக்கு ஏற்படும் நஷ்டங்களை ஈடுசெய்ய இது ஓரளவுக்கு உதவும் என எதிர்பார்க்கிறோம். தபால் செலவையும் நாமே பொறுத்துக் கொள்வோம்.

நிர்வாகம்.

### 31-ம் நாள் நினைவு



திருமதி. எலிசம்மா
கனகசுந்தரி

ஆண்டவன் அடியில்: 3–1–90

இவரின் ஆன்மசாந்திக்காக 2-2-1990 வெள்ளிக்கிழமை காலை 6-00 மணிக்கு யாழ். புனித அடைக்கலமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.
71, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

A/20

## போயிட்டி புனித லூர்த்து மாதா திருவிழா

எதிர்வரும் 2-2-90 மாலை 5-30 மணிக்கு போயிட்டி புனித லூர்த்துமாதா திருவிழா ஆரம்பமாகி 11-2-90-ல் காலை 7-00 மணிக்கு திருநாட் திருப்பலியுடன் முடிவடையும்.

★ நவநாட்கள் தினமும் 5-30 மணிக்கு ஆரம்பமாகும்.
★ சிந்தனை வழங்குபவர் அருட்திரு ஜீவா போல் அ. ம. தி.
★ 10-2-90 மாலை 4-00 மணிக்கு வெளி வீதிகளால் திருச்சொருபப் பவனி இடம் பெறும். அதனைத்தொடர்ந்து மாலை 6-00 மணிக்கு திருப்பலியும், நற்கருணைவழிபாடும் ஆரம்பமாகும்.
★ 11-2-90 காலை 7-00 மணி திருநாட் திருப்பலியும் திருச்சொருப ஆசீருப் இடம் பெறும்.

இறை மக்களை அன்போடு அழைக்கின்றோம்.

பங்குத்தந்தை
போயிட்டி, இளவாலை.

## பத்திரிகை இல்லை

சென்ற வாரம் யாழ் நகரிலிருந்து இந்தியப்படை வெளியேறுவதற்காக அமுலாக்கப்பட்ட உத்தியோகபூர்வமற்ற ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக எமது அச்சக ஊழியர்கள் வேலைக்கு வரமுடியவில்லை. இதனால் சென்ற வாரம் பாதுகாவலன் பத்திரிகை வெளிவரவில்லை என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பெப்பரவரி மாதம் 2ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/ 1001/ 58|91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்